# திருத்தங்கல் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2016 – 2017

# திருத்தங்கல் நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2016 – 2017

**அமைப்பு.-**

திருத்தங்கல் நகராட்சி, ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களின் கடிதம் ப.வெ.83/ஏ/64-65/எப்-2 நாள்.13.04.1966ன்படி 15.04.1966 முதல் பேரூராட்சியாக (முதல்நிலை) செயல்பட்டு வந்தது. அதன் பின்பு தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958 பிரிவு 9(4) அரசாணை எண். 2115 ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி நிர்வாகம், நாள். 22.12.1981ன் படி தோவுநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை எண்.301 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.08.2004ன் படி திருத்தங்கல் மூன்றாம்நிலை நகராட்சியாக மாற்றியமைக்கப்பட்டது. தற்போது அரசாணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.5) துறை நாள்.09.08.2010ன் படி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆட்சி எல்லை.-**

இந்நகர் சிவகாசி நகராட்சிக்கு வடக்கிலும், செங்கமல நாச்சியார்புரத்திற்கு கிழக்கிலும் செங்கமலப்பட்டி கிராமத்திற்கு மேற்கிலும், வடமலாபுரம் கிராமத்திற்கு தெற்கிலும் அமைந்துள்ளது. சுமார் 13.00 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது. இந்நகராட்சி எல்கையில் அறிக்கை ஆண்டில் எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை. இந்நகர் கடல் மட்டத்திற்கு மேல் 100.07 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

**மக்கள் தொகை.-**

இந்நகராட்சியின் மொத்தப்பரப்பளவு 13 சதுர கி.மீ ஆகும். இதன் மக்கள் தொகை 2011ம் ஆண்டைய கணக்கெடுப்பின்படி 55362 ஆகும். இதில் ஆண்கள் 27657ம் பெண்கள் 27686ம் உள்ளது. 1996ம் ஆண்டில் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் உத்தரவு எண். ந.க.134683/96/டி6 நாள்.03.07.1996ன் படி 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது இதில் எவ்வித மாறுதலும் இல்லை.

**நகர்மன்றம்.-**

இந்நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும நகர்மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் ஒதுக்கீடு விபரம் பின்பவருமாறு.

| மொத்த வார்டுகள் எண்ணிக்கை | தாழ்த்தப்பட்டவர் களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு எண். (பொது) | தாழ்த்தப்பட்டவர் களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு எண். (பெண்கள்) | பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு எண். | ஒதுக்கீடு செய்யப்படாத வார்டுகள். |
|---|---|---|---|---|
| 21 | 4 மற்றும் 8 | 6 மற்றும் 14 | 3,15,16,17 மற்றும் 21 | 1, 2, 5, 7, 9,10, 11,12, 13, 18, 19 மற்றும் 20 |

**ஆணையாளர்.-**

02.03.2012 முதல் 01.07.2012 வரை திரு.ம.முத்து, பி.இ., அவர்களாலும் 02.07.2012 முதல் 31.07.2012 வரை திருமதி. ஏ. சுல்தானா அவர்களாலும் 01.08.2012 முதல் 26.07.2013 முற்பகல் வரை திரு. ச. முருகன், அவர்களாலும் 26.07.2013 முதல் 24–12–2014 வரை திரு.சுப. இராமலிங்கம் பொறியாளர் அவர்களாலும் , 24–12–2014 முதல் 15–07–2015 வரை திரு. கோ. முத்துவெங்கடேஸ்வரன் 15–07–2015 முதல் 30–04–2016 வரை திரு. மு. மணி ஆணையாளர் அவர்களாலும் 31.04.2016 முதல் 21.08.2016 வரை திரு.சீ.சுரேஷ், பொறியாளர் அவர்களாலும் 22.08.2016 முதல் 10.03.2017 வரை திரு.மு.காந்திராஜ் ஆணையாளர் அவர்களாலும், தற்போது 14.03.2017 முதல் தற்போது வரை திரு.சீ.சுரேஷ் பொறியாளர் அவர்களால் திருத்தங்கல் நகராட்சியில் பொறுப்பு பார்த்து வரப்படுகிறது.

**பணியாளர்கள் பணியிட விபரம்.-**

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட அனைத்து பணியிடங்களின் பெயர் | அனுதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | **பொதுப்பிரிவு** | | | | |
| 1 | ஆணையாளர் | 1 | 0 | 1 | |
| 2 | மேலாளர் | 1 | 1 | 0 | |
| 3 | உதவியாளர் | 1 | 1 | 0 | |
| 4 | வருவாய் ஆய்வர் | 1 | 1 | 0 | |
| 5 | இளநிலை உதவியாளர் | 3 | 3 | 0 | |
| 6 | வருவாய் உதவியாளர் | 4 | 3 | 1 | |
| 7 | பதிவறை எழுத்தர் | 1 | 0 | 1 | |
| 8 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 0 | |
| | **கணிணி பிரிவு** | | | | |
| 9 | புள்ளி விபரக் குறிப்பாளர் | 1 | 1 | 0 | |
| | **பொறியியல் பிரிவு** | | | | |
| 10 | பொறியாளர் | 1 | 1 | 0 | |
| 11 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | 0 | |
| 12 | பணி ஆய்வர் | 1 | 1 | 0 | |
| 13 | பிட்டர் | 1 | 1 | 0 | |
| 14 | மின்வினைஞர் | 1 | 1 | 0 | |
| 15 | நீர் தொட்டிக் காவலர் | 4 | 2 | 2 | |
| 16 | ஆப்ரேட்டர் | 2 | 2 | 0 | |
| 17 | பைப் லைன் பராமரிப்பாளர் | 1 | 1 | 0 | |
| 18 | காவலர் | 2 | 2 | 0 | |
| 19 | மதகு திறப்பாளர் | 1 | 1 | 0 | |
| 20 | உதவியாளர் (தெருவிளக்கு) | 0 | 0 | 0 | |
| 21 | மின் பணியாளர் | 0 | 0 | 0 | |
| | **சுகாதாரப்பிரிவு** | | | | |
| 22 | துப்புரவு ஆய்வாளர் | 1 | 1 | 0 | |
| 23 | துப்புரவுபணி மேற்பார்வையாளர் | 2 | 2 | 0 | |
| 24 | ஓட்டுநர் | 3 | 2 | 1 | |
| 25 | துப்புரவு பணியாளர் | 36 | 34 | 2 | |
| | **நகரமைப்பு பிரிவு** | | | | |
| 26 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 | 1 | 0 | |
| | | **72** | **64** | **8** | |

**சாலைகள்.-**

இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தார்சாலைகள் | - | 30.905 கி.மீ |
| 2. | சிமெண்ட்சாலைகள் | - | 23.315 கி.மீ |
| 3. | மண்சாலைகள் | - | 14.105 கி.மீ. |
| | **மொத்தம்** | - | **68.325 கி.மீ** |

**தெருமின்விளக்கு.-**

திருத்தங்கல் நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படியான தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

| வ.எண். | விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 1392 |
| 2. | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 18 |
| 3. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 79 |
| 4. | 250 வாட்ஸ் மெர்குரி விளக்கு | 11 |
| 5. | உயர்மின் கோபுர விளக்கு | 13 |
| | மொத்தம் | **1513** |

**பண்டிகைகளும் திருவிழாக்களும்.-**

அங்கீகரிக்கப்பட்ட காட்சியாக அல்லது திருவிழாவாக இந்நகராட்சியால் ஏதும் நடைபெறவில்லை. டிசம்பர், ஜனவரி மாதங்களில் அருள்மிகு நின்றநாராயணப்பெருமாள் திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி திருவிழா நடத்தப்படும். இத்திருவிழாவிற்கு நகர்மன்றத்தால் தேவையான சுகாதார வசதி செய்யப்பட்டது.

**குடிநீர் திட்டம்.**

திருத்தங்கல் நகராட்சி மக்கள் தொகை 2011ல் 55343 வார்டு 21 தற்போது திருத்தங்கல் நகராட்சியின் பரப்பளவு 13.00 ச.கி.மீ. ஆகும். தற்போது உத்தேச மக்கள் தொகை 56000 . மேற்படி மக்கள் தொகைக்கு ஏற்ப தேவையான குடிநீர் அளவு 49.60 லட்சம் லிட்டர் ஆகும். தற்போது ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையத்தில் 7 லட்சம் லிட்டரும் , தாளோடை தலைமை நீரேற்று நிலையத்தில் 7 லட்சம் லிட்டரும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்பில் உள்ள மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 18 லட்சம் லிட்டரும் ஆக மொத்தம் 32 லட்சம் லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 65 லிட்டர் வீதம் 6 நாளைக்கு ஒரு முறை குடிநீர் விநியோகிக்கப் படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம்.-**

நகராட்சி பரப்பளவு 13.00 சதுர கிலோ மீட்டர். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 55343 ஆகும். தற்போது மொத்த வீடுகளின் எண்ணிக்கை 21568. தினசரி சராசரியாக சேகரமாகும் குப்பை சுமார் 16 டன் ஆகும். இந்நகரத்தில் உள்ள 21 வார்டுகளிலும் 34 நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலமாக குப்பைகள் அகற்றப்படுகின்றன. குப்பைகள் 21 தள்ளுவண்டிகள் மூலமாக வீடுவீடாக சேகரம் செய்து ஓரிடத்தில் குவிக்கப்படுகிறது.

அன்றாடம் தெருக்களில் சேகரிக்கப்படும் குப்பைகள்,4 லாரிகள் 1 டிராக்டர் மூலமாக நகராட்சியால் உடனுக்குடன் அகற்றப்படுகிறது.

திருத்தங்கல் நகராட்சியில் உரக்கிடங்கு அமைக்க ஆணைகுட்டம் பகுதியில் 7ஏக்கர் 37.5 செண்ட் நிலம் வாங்கப்பட்டு, உரிய தகுதி சான்றிதழ் பெற தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் விருதுநகர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**பேரூந்து நிலையம்.-**

திருத்தங்கல் நகராட்சியில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013–2014ன் கீழ் ரூ.369 இலட்சத்தில் 1.24 ஏக்கர் பரப்பளவில் புதிய பேரூந்து நிலையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதற்கான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 04.11.2013ல் வேலை உத்திரவு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டுவிழா 15.11.2013ல் முடிந்துள்ளது. மேற்படி பேருந்து நிலையத்தில் 11 பேருந்துகள் நிறுத்துவதற்கும், பயணிகள் அமருவதற்கு ஒரு அறையும், 4 கடைகள், உணவகம் ஒன்றும், ஓட்டுநர் ஓய்வு அறை ஒன்றும், பொருட்கள் பாதுகாப்பு அறை ஒன்றும், பயணச்சீட்டு வழங்கும் மற்றும் அலுவலக அறை ஒன்றும், ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதி, மாற்றுதிறனாளிகளுக்கான கழிப்பறை வசதிகள், சாய்வு தளத்துடன் கூடிய நவீன பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு மேற்படி பணிக்கு பயணிகள் அமருவதற்கு ஒரு அறையும், 4 கடைகள், உணவகம் ஒன்றும், ஓட்டுநர் ஓய்வு அறை ஒன்றும், பொருட்கள் பாதுகாப்பு அறை ஒன்றும், பயணச்சீட்டு வழங்கும் மற்றும் அலுவலக அறை ஒன்றும், ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதி, மாற்றுதிறனாளிகளுக்கான கழிப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு தற்பொழுது பேருந்து நிலையம் கட்டுமானபணிகள் முடிவடைந்து 29.01.2016அன்று தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

**நிதிநிலை.-**

மூன்றாண்டு சராசரி வருமானம் ரூ 8.65 கோடி.
மூன்றாண்டு சராசரி செலவு ரூ.14.18 கோடி.

# <u>திட்டப்பணிகள்</u>

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | எடுக்கப்பட்ட பணிகள் | மதிப்பீடு (லட்சத்தில்) | தொகை | மீதம் இருப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுநிதி | 12 | 1.05 | 47.4 | 57.6 |
| 2 | வறட்சி நிவாரண நிதி | 2 | 15.00 | - | - |
| 3 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 4 | 35 | - | - |
| **4** | சிறப்புசாலை திட்டம் | 5 | 1000.00 | 629.00 | 371 |
| **5** | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் | 1 | 200.00 | - | 200.00 |
| **6** | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | - | - | - | - |
| **7** | குழந்தைகள் வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் | 4 | 9.00 | - | 9.00 |
| **8** | தூய்மை இந்தியாதிட்டம் | 6 | 36.00 | 34.00 | 2.00 |
| **9** | தூய்மை இந்தியாதிட்டம் | 3 | 30.00 | - | - |

## திருத்தங்கல் நகராட்சி

**நகர்மன்றம் கூட்ட நடவடிக்கை தீர்மானம் எண். நாள். ன் உண்மை நகல்**

பொருள்–

திருத்தங்கல் நகராட்சியின் 2017–2018ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்துள்ளது தனி அலுவலரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

திருத்தங்கல் நகராட்சியின் 2017–2018ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்துள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் :**

அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/சீ. சுரேஷ், பி.இ.,
தனிஅலுவலர்/மற்றும் ஆணையாளர்(பொ)
திருத்தங்கல் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
திருத்தங்கல் நகராட்சி

# <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

**“மழைநீர் சேகரிப்போம்”** **“மண்வளம் காப்போம் “**

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| --- | --- |
| திரு.சீ.சுரேஷ், B.E., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், |
| ஆணையாளர் (பொ) | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம் | |
| திருத்தங்கல் | |

---

**ந.க.எண்: 884/2015/சி1** **நாள்: 12.05.2017**

---

**பொருள்:** நிர்வாக அறிக்கை – திருத்தங்கல் நகராட்சி - 2016–2017 ஆம் அண்டிற்கான நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல் – தொடர்பாக.

******

திருத்தங்கல் நகராட்சியின் 2016–2017ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத் தீர்மான நகலுடன் இத்துடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆணையாளர்(பொ)**
**திருத்தங்கல் நகராட்சி**

**இணைப்பு:–** **நிர்வாக அறிக்கை 2 பிரதிகள்**